# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா; 5-00

முரசு 03 ஒலி 225 ஆங்கீரச ஆனி 25 (09.07.1992) வியாழன்


## றொட்னி கிங் மீண்டும் கைதாகி விடுதலை!

அமெரிக்காவின் லொசஞ் எஞ்சல் நகரில் கலவரங்கள் வெடித்து வேறு பல நகரங்களுக்கு பரவக் காரணமாக இருந்தது கறுப்பு இனத்தவரான வாகனச் சாரதி றொட்னி கிங் என்பவர் வெள்ளை இனப் பொலிஸாரால் தாக்கப்பட்டார் சென்ற வாரம் றொட்னி கிங் மீண்டும் பொலிசாரால் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார் தம்மை றொட்னி கிங் தாக்கினார் என அவரது மனைவி புகார் செய்ததாகக் கூறியே பொலிசரால் அவர் கைது செய்யப்பட்டார் அவரது மனைவி இது தவறான குற்றச் — 04 ஆம் பக்கம் பார்க்க

# புலிகளை ஏன் தடை செய்யக்கூடாது

# தமிழக அரசு விளக்கம் கேட்கின்றது

## 20 ஆம் திகதி புலிகள் ஆதரவுப் போராட்டத்தை தடுத்து நிறுத்தும் தமிழக அரசின் முயற்சி?

விடுதலைப் புலிகள் அமைப்பையும் தமிழகத்திலுள்ள அதன் ஆதரவாளர்களையும் இந்தியா ஏன் தடைசெய்யக் கூடாது என்பதற்கான எழுத்து மூல காரணத்தை தருமாறு விடுதலைப் புலிகளை தமிழக அரசு நேற்றுக் கேட்டுள்ளது

புலிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் சில அரசியற்கட்சிகள் போராட்டங்கள் நடத்தத் திட்டமிட்டுள்ள வேளையில் தமிழக அரசின் இவ்வறிவிப்பு வெளியாகியுள்ளது.

தமிழக அரசு நேற்று விடுத்த இந்த அறிவிப்பின்படி புலிகள் மீது ஏன் தடை விதிக்கக் கூடாது என்பதற்கான காரணத்தை புலிகள் 30 நாள்களினுள் எழுத்து மூலம் தருமாறு கோரப்பட்டுள்ளது

தமிழக அரசின் இக்கோரிக்கை அடங்கிய அறிக்கை யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளின் தலைமைச்செயலகம், லண்டனில் உள்ள புலிகளின் சர்வதேச செயலகம் லண்டனிலுள்ள புலிகளின் பொறுப்பாளர்களில் ஒருவரான கே. ஆர். சேகர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இதேவேளை எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை, இலங்கையில் ஸ்ரீலங்கா இரா = 04 ஆம் பக்கம் பார்க்க

## கப்பலில் வந்த தபால்கள் இன்று எடுத்துவரப்படும்

குமண கப்பலில் இருந்து நேற்று தபால் பொதிகளும் இறக்கப்பட்டன.

வடமராட்சிப் பகுதியைத் தவிர ஏனைய பகுதி தபால் பொதிகள் இன்று யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்படும் என தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்:

இத்தபால் பொதிகள் நாளை வெள்ளிக்கிழமை தரம் பிரிக்கப்பட்டு வழமைபோல விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

குடாநாட்டின் ஏனைய பகுதி தபால் பொதிகளும் அந்தந்த தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் பொதுமக்கள் யாழ் பிரதம தபாலகத்தின் முன்பாக இதற்காக கூட வேண்டாம் எனவும் அவ்வதிகாரி மேலும்தெரிவித்தார் 06

## பருத்தித்துறைக் கடலில் மீனவர் இருவர் கைது!

பருத்தித்துறை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் கைது செய்துள்ளதாகவும் இவர்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு இம் மீனவர்களின் உறவினர்கள் யாழ். அரசாங்க அதிபரையும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவையும் கேட்டுள்ளனர்.

மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து பருத்தித்துறைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மகேந்திரன் விஜயராஜா (19) ஐ சிவநேசலிங்கம் (20) ஆகிய இருவரையுமே ஸ்ரீலங்கா கடற்படையினர் கைது செய்துள்ளனர். 11

## புலிகளின் ஊடுருவலை தடுக்க இந்தியாவுக்கும் அதிக செலவாம்

தமிழகத்தினுள் விடுதலைப் புலிகள் ஊடுருவாமல் கண்காணிக்க போடப்பட்டுள்ள பாதுகாப்பினால் இந்தியாவுக்கும் பெரும் செலவுகள் ஏற்பட்டுள்ளதாம்.

இத்தகவலை சஞ்சிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தின் 1000 கிலோ மீட்டர் கரையோரத்தின் நெடுகிலும் மத்திய அரசின் ரிசேர்வ் பொலிஸ் படையின் 10 பிரிவுகள், தமிழக விசேட பொலிஸ்படை, 5 கடற்படை பிரிவுகள் 35 பொலிஸ சோதனைநிலையங்கள் போன்றவற்றை இந்திய அரசு அமைத்துள்ளது. இதுநாட்டின் பொரு ...04 ஆம் பக்கம் பார்க்க

## இடம் பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு வழங்கப்படும்

இராணுவ நடவடிக்கையால் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை உலர் உணவு பெறாத குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்க யாழ் அரசாங்க அதிபர் கே மாணிக்கவாசகர் நடவடிக்கைஎடுத்துள்ளார்

இடப்பிரிவில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த பலர் தமது நிரந்தரமான வசிப்பிடப்பிரிவிலும் தற்போது இடம் பெயர்ந்திருக்கும் பிரிவிலும் உலர் உணவு பெறாத நிலையில் இருப்பதாக அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது ...04 ஆம் பக்கம் பார்க்க

## சுட்டு வீழ்த்திய வை-8 விமானம் 15 கோடி ரூபா பெறுமதியானது

கடந்த ஞாயிறன்று புலிகளினால் சுட்டுவீழ்த்தப்பட்ட விமானப்படையின் வை-8 விமானத்தின் பெறுமதி 15 கோடி ரூபா என ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா விமானப்படை இரு வை-8 விமானங்களை மட்டுமே கொண்டுள்ளது. அவற்றில் ஒன்று ஏற்கனவே மோசமாக பழுதடைந்த நிலையில் இரத்மலானை விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. மற்றைய விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டு விட்ட நிலையில் விமானப்படைக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது.

புலிகளால் வை-8 விமா ...04 ஆம் பக்கம் பார்க்க

## குமணவில் இருந்து பொருள்கள் இறக்க அனுமதி கிடைத்தது

கொழும்பில் இருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்துள்ள குமண கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று விசேட அனுமதியளித்துள்ளது

இதனைத் தொடர்ந்து பொருள்கள் கப்பலில் இருந்து நேற்று இறக்கப்பட்டன.

பொருளகள் இறக்கப்பட்டு லொறிகள் மூலம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் உதவியுடன்யாழ்ப்பாணம் எடுத்து வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 47

## படையினரைப் பலப்படுத்த மேலும் படையினர் தரையிறக்கம்

வாழைச்சேனை சந்தியில் தற்போது தங்கியுள்ள பலவேகய படையினர் முன்னேறும்முயற்சியை எதையும் கடந்த இரு தினங்களாக மேற்கொள்ளவில்லை.

இவர்கள் தொடர்ந்து தமது நிலைகளை பலப்படுத்துவதிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஒருவார இராணுவ நடவடிக்கையின் போது புலிகளின் கடும் எதிர்ப்பினால் பலத்த இழப்புகளை படையினர் சந்தித்ததையடுத்து படையினரின் தொகையும், சாதனங்களும் அதிகரிக் —04 ஆம் பக்கம் பார்க்க

## உணவுப் பொருள்களுக்கு உடனடி தட்டுப்பாடில்லை

யாழ். குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கு உடனடி தட்டுப்பாடு இல்லையென யாழ் அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ் பல நோ. கூ. சங்கம் அதன் கிளைகளினூடாக ரின்மீன், பால்மா, மல்லி, சீரகம், மிளகு, சவ்வரிசி, சவர்க்காரங்கள், பிஸ்கட், மைசூர் பருப்பு சீனி போன்றவற்றை வாடிக்கையாளர்களுக்கு கட்டுப்பாடின்றி விநியோகித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 47

## இராணுவத் தலைமையில் பிளவு ஒப்சேவர் கட்டுரையில் தெரியவந்தது

அரச கட்டுப்பாட்டிலுள்ள சண்டே ஒப்சேவர் பத்திரிகை இராணுவத் தளபதி லெப், ஜெனரல் சிசில் வைத்தியரட்ணவை வெகுவாக பாராட்டுவதுடன் கூட்டுப்படைத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க ஆகியோரைக்கடுமையாக விமர்சித்தும் உள்ளது.

கடந்த ஞாயிறு அப்பத்திரிகை வெளியிட்ட கட்டுரை ஒன்றில் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன வெற்றிகள் பெற்றுவருகிறார் என்று பாராட்டி கூட்டுப்படை தள —04 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து உடற்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் 1992-07-31 வரை என்னால் பெறறுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:-
ரூபா 6,000/-10×200—8,000/-(வினைத்திறமை கண்தடை) —8250—7X250—10,000/-மாதமொன்றுக்கு.

தகைமைகள்

(அ) உடற்கல்வியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது ஒத்த அல்லது உயர் தகைமைகளுடன் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன் பின்னர், பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலும், செயற்படுத்துவதிலும் குறைந்தபட்சம் 12 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் அல்லது உயர் தொழில் தகைமைகளுடன் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன்பின்னர்பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களைஒழுங்குபடுத்துவதலும் குறைந்தபட்சம் 15 வருட அனுபவம்.

வயது:-
45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

தெரிவு:-
நேர்முகப்பரீட்சை மூலம்

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களையும், இதர விபரங்களையும் இப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23X10 ச.மீற்றர் அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் அவர் வைக்கப்படுவார்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

உடற்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-07-07

07015


## கூட்டுப்படை அறிவிப்பு

பலவேகயப்படையினர் வறண்ட கடனீரேரி பகுதியை கடந்து ஆனையிறவு முகாமின் தென்புறத்தை அடைந்ததாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து சட்ட மருத்துவத்துறையில் பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1992-09-30 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:-
பேராசிரியர் தரம் 11:— ரூபா 12,200 — 6×300 —14,000/-
(மாதமொன்றுக்கு)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் இப் பல்கலைக்கழகத் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23×10 ச.மீற்றர் அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு:-
ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
1992-07-07

07014


★ ஜே. என். டிக்ஸிட்டிடம் ஜெயின் கமிஷன்

# தமிழீழக் கொள்கை பற்றி விளக்குமாறு கோரிக்கை!

தமிழீழக் கொள்கையின் தோற்றுவாய், அது குறித்த இந்தியாவின் நிலைப்பாடு ஆகிய விடயங்கள் பற்றி விளக்கமளிக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் ஜே. என். டிக்ஸிட்டை ஜெயின் விசாரணை ஆணைக்குழு கேட்டுள்ளது.

ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணமான சம்பவங்கள் தொடர்பான விபரங்களைத் தெரிவிக்குமாறும் இவ் ஆணைக்குழுவினால் டிக்ஸிட் கேட்கப்பட்டுள்ளார்.

முன்னாள் தமிழகப் பொலிஸ் ஆணையாளர் மோகனதாஸாக்கும் இது தொடர்பான கோரிக்கைகளை மேற்படி ஆணைக்குழு விடுத்துள்ளது.

இந்தியாவின் தற்போதைய வெளியுறவுச் செயலரான ஜே என் டிக்ஸிட் இலங்கை-இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டகாலத்திலும், இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்த ஆரம்ப கட்டத்திலும் கொழும்பில் இந்தியத் தூதவராகப் பணிபுரிந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ராஜீவின் ஆலோசகர்கள் மீதே குறைகாண வேண்டும்

\- மோகனதாஸ்

இலங்கை பற்றிய இந்தியக் கொள்கைக்காக முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை அல்ல, அவரது ஆலோசகர்களையே குறை கூறவேண்டுமென முன்னாள் தமிழகப் பொலிஸ் ஆணையாளர் மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

பேரழிவுகளை ஏற்படுத்திய இந்தியாவின் கொள்கைக்கு ராஜீவ்காந்தியைக் கண்டிப்பது மிக மோசமானதாகும். ராஜீவ் காந்திக்குக் கொள்கைகளை வகுத்துக்கொடுக்கும் அவர்களது ஆலோசகர்களையே குறை கூறவேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்

இலங்கை விவகாரம் தொடர்பாக அவர் எழுதியுள்ள நூலொன்றிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகமுதலமைச்சராக எம்.ஜி.ஆர் பதவிவகித்த காலத்தில் அவரது மிக நம்பிக்கைக்குரிய ஒருவராக மோகனதாஸ் விளங்கியவர் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சர்வகட்சி மாநாட்டின் பலாபலன்கள் பற்றிக்கேள்வி

சர்வகட்சி மாநாடு தொடர்பாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப சுதந்திரக் கட்சி எம்.பி. ஒருவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

கொழும்பு மாவட்ட எம்.பி நிமல் சிறிபால டி சில்வா பின்வருமாறு கேட்கிறார், "சர்வகட்சி மாநாட்டிலே. இதுவரை நடத்தப்பட்ட கூட்டங்கள், கருத்தரங்குகள், பேச்சுவார்த்தைகள் முதலியவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முடிவுகள் ஏதேனும் உண்டா? ஆமெனில் இவை எந்தப் பிரச்சினைகள் விடயங்கள் தொடர்பானவை என்றும் மேற்படி தீர்மானங்களும் முடிவுகளும் யாவை என்பதையும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பிரதமருமான டி. பி. விஜேதுங்க குறிப்பிடுவாரா?

## ஒப்பந்த ஆசிரியர்களுக்கு இம்மாதம் முதல் வேதனம்

இளைப்பாறி மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு 01.01.92 முதல் நியமனம் புதுப்பிக்கப்பட்டு கடமையாற்றும் கணித, ஆங்கில, விஞ்ஞான ஒப்பந்த ஆசிரியர்களுக்கு, இதுவரை வழங்கப்படாத சம்பளங்களை 01.01.92 முதல் நிலுவையுடன் இம்மாதம் வழங்குமாறு யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர்சகல கோட்டங்களுக்கும்பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளர்களையும் பணித்துள்ளார்.

ஆனால் அவர்கள் இறுதியாகப் பெற்ற சம்பளத்தின் 50 சதவீதத்தையே நிலுவைகளுடன் வழங்குமாறும் அவர் மேலும் பணித்துள்ளார். 15

## ரஷ்ய தூதரக அதிகாரி புதுடில்லியில் கடத்தல்

புதுடில்லியில்வைத்து ரஷ்ய தூதரக அதிகாரி ஒருவர் கடத்தச் செல்லப்பட்டுள்ளதாக செய்தி வொன்று கூறுகிறது. எனினும் இச்செய்தி உடனடியாக ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

## ஆடி வேல் விழாவில் ஏ. கே. சியின் கிளாரினெட் கச்சேரி

கொழும்பில் நடைபெறவுள்ள ஆடிவேல் விழாவில் பிரபல கிளாரினெட் வித்துவான் ஏ. கே. சி. நடராஜவின் கிளாரினெட் இசையும் இடம் பெறவுள்ளது.

இந்த ஆடிவேல் விழாவில் தமிழகத்திலிருந்து பிரபல தவில், நாதஸ்வரக்கலைஞர்களும் இசைக்கச்சேரிகளை நடாத்தவுள்ளனர்.


யாழ்-மாவட்ட சனசமூகநிலையங்களின்சம்மேளனம் நடாத்தும்

பேச்சு, கட்டுரை, பொது அறிவுப் போட்டி 1992

யா/வேம்படி மகளிர் கல்லூரியில் 19-07-92 காலை நடைபெறும்

நூலகர் பயிற்சிநெறி —1992, பாலர் ஆசிரியை பயிற்சிநெறி 1992

விண்ணப்பங்கள் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்

33 பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:-ஹரன் புடவையகம், திருநெல்வேலி

07016


## யாழ். பிரிவு போட்டிகள்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன் தினம் இடம் பெற்ற ஆட்டங்களில் குருநகர் தொடர்மாடி விளையாட்டுக்கழகத்தை திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

மற்றொரு ஆட்டத்தில் சென் அந்தனீஸ் விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவு அணியை எதிர்த்து ஆட இருந்த கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் வருகை தராததினால் சென் அந்தனீஸ் கழகம் 'வாக்ஓவர்' முறையில வெற்றி பெற்றது.

இன்று இடம் பெறவுள்ள ஆட்டங்களில் வைக்கிங் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் மக்கள் அணியும். சென் நீக்கிலஸ் அணியை எதிர்த்து திருவள்ளுவர் அணியும் ஆடவுள்ளன 16

## அரியாலை அணி சாம்பியனானது

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 6ஆம் திகதி இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது இவ் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழக அணியை ஒன்றிற்கு பூச்சியம் என்ற கோல்கணக்கில் தோற்கடித்து நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சாம்பியன் ஆனது 16

## கலை, இலக்கிய போட்டிகள்

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் கலை, இலக்கியப்போட்டிகளை நடத்துகின்றது. சிறுகதை ஓவியம், கவிதை, கட்டுரை, பொது அறிவுப் போட்டி ஆகியன முக்கிய போட்டிகளாக இடம்பெறும்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சனசமூக நிலையங்களுக்கு ஊடாக அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது, 14

## பனங்கட்டி விநியோகம்

தற்போது குடாநாட்டில் சில ப.நோ.கூ. சங்கங்கள் மாணவர் மதிய உணவு முத்திரைக்கு பனங்கட்டியையும் வழங்கி வருகின்றன, 22

## முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரிடம் லேக்ஹவுஸ் நிறுவனம் மன்னிப்புக் கோருகிறது

'லேக் ஹவுஸ்' பத்திரிகை நிறுவனமும் அதன் ஆசிரியரும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவிடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரியுள்ளார்கள்.

அனுருத்த தில சிறியினால் எழுதப்பட்ட மே 10 யூன் 14 ஆகிய திகதிகளில் சண்டே ஒப்சேவரில் வெளி வந்த கட்டுரைகளிலும் யூன் 21 சண்டே ஒப்சேவரில் எச். எல். டி. மஹிந்த பாலசிங்கல் எழுதப்பட்ட கட்டுரையிலும் அனுருத்த திலகசிறியினால் மொழி பெயர்க்கப்பட்டு யூன் 21 இல் சிலுமின வில் வெளி வந்த கட்டுரையிலும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச் சம்பந்தப்படுத்தி வந்த விடயங்கள் பொய்யானவை எனவும் அவதூறு விளைவிக்கக் கூடியவை எனவும் அவையாவற்றையும் நிபந்தனையின்றி வாபஸ் பெற்று மன்னிப்புக் கோருவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இக் கட்டுரைகளினால் அவருக்கு ஏற்பட்ட மனக்கஷ்டத்துக்கு வருந்துவதாகவும் அவதூறு உண்டுபண்ணும் நோக்கம் எதுவும் தமக்கு இல்லையெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இக் கட்டுரைகள் தொடர்பாக பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் தவறினால் முப்பத்து ஒன்பது கோடி ரூபா மான நஷ்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்ய நேரிடும் என முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா சட்ட அறிவித்தல் அனுப்பியதைத் தொடர்ந்தே மேற்கண்டவாறு மன்னிப்புக் கோரப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவு ஏற்படுத்தக் கூடிய நிலையை உருவாக்கவிருந்ததாகவும் தெரிகிறது.

## அமெரிக்க கடற்படை அதிகாரி கொழும்பு விஜயம்

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையேயான நட்புறவை மேலும் வலுவடையச் செய்வதற்கான முயற்சிகள் தற்பொழுது மீண்டும் எடுக்கப்பட்டு வருவதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

அமெரிக்க ஏழாவது கடற்படையின் உயரதிகாரி ஒருவர் இந்த முயற்சியின் ஆரம்பக் கட்டமாக நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

இவரது விஜயம் நல்லுறவு விஜயமாக அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## நான்கு அம்சத் திட்டம் பற்றி மு. காங்கிரஸுடன் பேச்சு

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நான்கு அம்சத் திட்டத்தினை தயாரித்துள்ள ஏழு தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று முன்தினமிரவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப்பீட பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் தயாரித்த நான்கு அம்சத்திட்டத்தை ஏற்பதில்லையென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக்குழு தீர்மானித்துள்ளமை பற்றியும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கட்அவுட் புள்ளிகள் கொழும்பில் வெளியாகின

1991-92 ஆம் கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்கு புதியமாணவர்களைத் தெரிவு செய்வதற்குரிய வெட்டுப் புள்ளி (கட் அவுட்) விபரங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கொழும்பில் வெளியிட்டுள்ளது.

இக் கல்வியாண்டுக்கு ஒன்பதாயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

## சிகைக்காயினுள் ஹெரோயின் கடத்திய யுவதிகள் அகப்பட்டனர்

இந்தியாவிலிருந்து ஹெரோயினை கடத்தி வந்த இரு இளம் பெண்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கச்சோதனையில் அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்கள் சிகைக்காய் பொதியினுள் இவற்றைக் கடத்தி வந்தபோதே அகப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

## ரயிலில் வந்த தமிழ்வாலிபர் ராகமவில் வைத்துக் கடத்தல்

வடபகுதியிலிருந்து யாழ் தேவியில் கொழும்பு நோக்கி வந்த வடபகுதி வாசி ஒருவர் ராகம ரயில் நிலையத்தில் வைத்துத் தம்மை இராணுவத்தினர் என்று கூறிக் கொண்ட இருவரால் விசாரணை என அழைத்துச் செல்லப்பட்டதாகவும் 1 ஆம் திகதி நிகழ்ந்த இச் சம்பவத்தின் பின் அவர் இன்னமும் கொழும்பு சென்றடையவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நபரிடம் அந் நேரம் 50 ஆயிரம் ரூபா பணமிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 64 வயது செல்வந்தர் மருதானையில் குத்திக் கொலை!

மருதானையில் செல்வந்தர் ஒருவர் அவரது வீட்டில் வைத்துக் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

64 வயதான சந்திர சிறி அத்துக்கோறள என்ற பிரமச்சாரியே இவராவார்.

கொள்ளையே இக் கொலைக்குக் காரணமெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## கொழும்பில் கருத்தரங்கு

வடக்கு கிழக்கு நிலை தொடர்பான கருத்தரங்கொன்றினை அகில இலங்கை சோனகர் சங்கம் கொழும்பில் ஏற்பாடு செய்துள்ளது.

13 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் கொள்ளுப்பிட்டியில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் இந்தியத் தூதுவர் என். என் ஜா, அமைச்சர் தொண்டமான் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

## தமிழகத்தில் தற்கொலை

இந்தியாவில் பாண்டிச்சேரி அகதிமுகாமில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ்யுவதி ஒருவர் அங்கு நஞ்சருந்தி தற்கொலை செய்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் பெண் அங்கு இளைஞர் ஒருவரைக் காதலித்ததாகவும், அவ் இருவரினதும் திருமணத்திற்கு சீதனப்பிரச்சினை தடையாக வரவே இப் பெண்மணி தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஹினிதுமையில் மினிப்புயல்

தென்பகுதியில் நேற்று முன்தினம் பலத்த காற்றும் பேய் மழையும் பொழிந்ததாக அறிவிக்கப்படுகிறது.

ஹினிதுமையில் மணிக்கு 40 மைல் வேகத்தில் வீசிய மினிப்புயலினால் அப்பகுதியில் கடும் சேதமேற்பட்டுள்ளது.

அங்கு மரங்கள் நூற்றுக்கணக்கில் முறிந்து விழுந்தன, பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து சேதமாகின.

## முடிவுத்திகதி நீடிப்பு

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிதான முடிவுத் திகதி இம்மாதம் 31 ஆம் திகதியாகும். 06

## ஒரேயொரு தமிழர் தெரிவு

திறந்த பல்கலைக்கழக சமூக, விஞ்ஞானபீட மாணவர் சங்க உறுப்பினராக மட்டக்களப்பைச் சேர்ந்த ஐ. நடேசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் இப்பதவிக்குத் தெரிவாகியுள்ள ஒரேயொரு தமிழர் இவராவார்.

ஏனைய பதவிகளுக்கு தற்போது போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

## வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

இந்தியா முழுவதும் கடந்த 7 நாட்களாக இடம் பெற்ற லொறிகள் வேலை நிறுத்தம் விலக்கிக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. போக்குவரத்துத் துறை அமைச்சருடனான லொறிச்சங்க பிரதிநிதிகள் நடத்திய பேச்சை அடுத்து இம் முடிவு எடுக்கப்பட்டது.

## பஞ்சாப் இராணுவம் திரும்புகிறது

தேர்தல் காலத்தில் பஞ்சாப்பிற்கு அனுப்பப்பட்ட ஒரு லட்சம் இராணுவத்தினரும் அங்கிருந்து படிப்படியாக விலக்கப்பட்டு வருகின்றனர். படையினர் திருப்பியனுப்பப்படமாட்டார்கள் என பஞ்சாப் முதலமைச்சர் கூறிய போதிலும் அதிகாரிகள் இம் முடிவை எடுத்துள்ளனர்.

## யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபருக்கு இன்று பிரியாவிடை

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் தொடர்ந்து பதின்மூன்று வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி இம் மாதம் முதலாந் திகதி தொடக்கம் ஆசிரிய சேவையில் இருந்து இளைப்பாறியுள்ள வண பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளாருக்கு யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியின் புதிய அதிபர் வண பிதா அல்போன்சஸ் இருதயநாயகம் பெனாட்டும், கல்லூரி ஆசிரியர், மாணவர்களும் பிரியாவிடை வைபவம் ஒன்றை இன்று ஒன்பதாம் திகதி நடத்த உள்ளார்கள். இவ் வைபவம் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்குத் திருப்பலியுடன் ஆரம்பமாக உள்ளது.

இளைப்பாறிய வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் மிகவும் வறிய குடும்பத்தின் ஏகபுதல்வராக 30. 6. 32 இல் பிறந்தார் இவர் பிறந்து அறுபத்தைந்தாவது நாள் இவரது தகப்பனார் இறக்க இவரது சொந்த மாமனாரின் அன்புப் பராமரிப்பில் இவர் வளர்ந்தார்

ஆரம்பக் கல்வியை மல்லாகத்தில் உள்ள சிறிய பாடசாலையில் பயின்ற இவர் 1943 ஆம் ஆண்டில் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் மத்திய வகுப்பில் சேர்ந்தார். 1949 ஆம் ஆண்டில் சிரேஷ்ட பாடசாலை வகுப்பில் சித்தியடைந்த இவர் 1959 ஆம் ஆண்டில் ஆசிரியராக யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரியில் இணைந்தார் 21 12. 58 இல் குருத்துவத்தை இவர் மேற்கொண்டார் ஒட்டாவா பல்கலைக்கழகத்தில் கலை முதுமாணி பட்டத்தைப் பெற்று 17. 1. 66 இல் தாய்நாடு திரும்பிய இவர் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் பகுதித் தலைவராக நியமனம் பெற்றார்.

1979 ஆம் ஆண்டில் இருந்து அதிபராக பொறுப்பேற்ற இவர் இளைப்பாறும் வரை தொடர்ந்து இக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார், கல்லூரியின் ஆசிரியராக இருபது வருடங்களும், அதிபராக பதின்மூன்று வருடங்களும் சேர்த்து மொத்தம் முப்பத்தி மூன்று வருடங்கள் இவர் ஆசிரிய தொழிலை மேற்கொண்டார், அத்துடன் இதுவரை யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக அதிக்கூடிய வருடங்கள் சேவையாற்றிய முதல் அதிபர் என்ற பெருமையும் இவர் பெற்றுள்ளார்,

இவர் கல்லூரியின் வளர்ச்சிக்கும் கல்லூரியின் ஆசிரியர் மாணவர்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதிலும் மிகுந்த பங்களிப்பைச் செய்துள்ளார். கல்லூரியில் குடும்பவிழா (Family Day) ஒன்றை அறிமுகப்படுத்தியவர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவரது காலத்தில் சிறிலங்கா படையினரினதும், இந்திய அமைதி காக்கும் படையினரினதும் மிருகத்தனமான தாக்குதல் காரணமாக யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலுமிருந்து குடிபெயர்ந்த மக்கள் இக்கல்லூரியில் தங்குவதற்கும் அவர்களது சுகாதார தேவைகளை உடன் கவனிப்பதிலும் அவர்களைப் பாதுகாப்பதிலும் இவர் தமது கடமையை செவ்வனே ஆற்றியவர்.

மேலைத்தேய சங்கீதத்தில் மிகுந்த ஆற்றல் உடையவராகத் திகழும் இவர் கல்லூரிக்காக பல இனிய பாடல்களையும் உருவாக்கி வழங்கி உள்ளார்.

ஆசிரிய சேவையில் மட்டுமின்றி சமூக சேவையிலும் விளையாட்டுத்துறையிலும் அதிக ஆர்வம் காட்டியவர் அருட்திரு பிரான்சிஸ் யோசப் அடிகளார்,

இவர் யாழ் ஆயரில்லத்தில் தங்கி இருந்து இறை பணியை மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

## தேயிலை வர்த்தகத்தில் இந்தியக் கம்பனிகள் ஆர்வம்

இந்தியாவின் டாடா கம்பனி மற்றும் ஹரிசன்ஸ், மலையாளம் கம்பனிகளின் தேயிலை வர்த்தக பிரதிநிதிகளின் இலங்கை வருகை உள்ளூர் தேயிலை வர்த்தகத் துறையினரை அச்சம் அடையச் செய்துள்ளதாகத் தெரிகிறது.

இக் கம்பனிகள் ஸ்ரீலங்காவின் தோட்ட நிர்வாகங்களை பொறுப்பேற்றுள்ள இருபத்தி இரண்டு முகாமைத்துவக் கம்பனிகளில் மூன்றில் பாரிய உரிமையுள்ளவையெனக் கூறப்படுகிறது.

இதனால் இந்த இந்தியக் கம்பனிகள் சர்வதேச சந்தைகளில் தமது நலன்களை முன்னெடுக்கக் கூடும் எனவும் அஞ்சப்படுகிறது என்று தேயிலை வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன

எனினும் இப் பிரதிநிதிகள் பல உள்ளூர்க் கம்பனி நிர்வாகிகளுடன் தேயிலை உற்பத்தி, மற்றும் சந்தைப் படுத்தல் தொடர்பாக விரிவாக ஆலோசனைகளை நடத்திவிட்டே சென்றுள்ளனர்.

## விமானம் வீழ்ந்தது பற்றி விசாரிக்க மன்றம் அமைப்பு!

இபலோகப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை இலங்கை விமானப்படையின் வை-8 விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியது பற்றி விசாரணை செய்வதற்கு விசாரணை மன்றமொன்று அமைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இந்த விசாரணை மன்றம் தனது அறிக்கையை ஒருவார காலத்திற்குள் சமர்ப்பிக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## சனிக்கிழமை வேலைக்கு மேலதிகக் கொடுப்பனவு

தபால் ஊழியர்களுக்கு இந்த மாதம் முதல் சனிக்கிழமை வேலைக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு அவர்களது ஒரு நாள் கொடுப்பனவுக்கு சமனானதாக இருக்கும்.

# குடும்பநல சேவையாளர் பதவிகளை ஏற்க மறுப்பு

கிளிநொச்சி மாவட்டத்தி லுள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்ட புதிதாக தெரிவு செய்யப்பட்ட குடும்ப நல சேவையாளர்கள் அங்கு சென்று பதவிஏற்க மறுத்து வருவதாக அறியப்படுகின்றது

தற்போதைய நிலைமையில் தாங்கள் அங்கு சென்று கட மையாற்ற முடியாது இருப்பதாகவும் யாழ் மாவட்டத் திலுள்ள வெற்றிடங்களுக்கு தங்களை நியமனம் செய்யு மாறும் யாழ் பிரதேச சுகா தார சேவைப் பணிப்பாளரி டம் வேண்டுகோள் விடுத் துள்ளதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது. 13

# பள்ளேகலை முகாம் நிர்வாகம் புனர்வாழ்வு ஆணையாளரிடம்

கண்டி, பள்ளேகலை தடுப்பு முகாம் நிர்வாகம் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது

இது வரை பந்தோபஸ்து மற்றும் நிர்வாகப பணிகளை பொலிஸ திணைக்களமே மேற் கொண்டு வந்தது இனி மேல் பந்தோபஸ்துப் பணியை மட்டுமே பொலிஸ திணைக் களம் கவனிக்கும்.

இந்த தடுப்பு முகாமில் இரண்டு வருடங்களுக்கு முன் பாக ஜே வி. பி எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்ட எழுநூறு பேர் வரை தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்

இம் முகாமிலிருந்து கைதி கள் தப்பியோடியதும் மேலும் பலர் தப்பியோடுவதற்காக 45 அடி நீள இரகசிய சுரங் கப்பாதை அமைத்ததும் கைதிகளுக்கிடையேகலவரம் நடைபெற்று பலர் காயப்பட் டதும், பொலிசாரின் சூட் டுக்கு மூன்று கைதிகள் பலி யானதும் இந்த நிர்வாக மாற்றத்திற்கு காரணமென தெரிவிக்கப்படுகிறது.

# சார்க் அமைச்சர்கள் மாநாடு கொழும்பில் அங்குரார்ப்பணம்

தெற்காசிய பிராந்திய ஒத் துழைப்பு நாடுகள் (சார்க்) வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு நேற்று கொழும்பில் ஜனாதிபதி பிரேமதாஸவி னால் ஆரம்பித்துவைக்கப் பட்டது.

உலகில் எங்கும் வர்த்தகக் கூட்டமைப்புக்கள் உருவாகி வரும் போது "சார்க்" நாடுக ளில் பொருளாதார ஒற் றுமை மிக மிக அவசியம் என வும் பிரேமதாஸ குறிப்பிட் டார்

## சுட்டு ..

னம் வீழ்த்தப்பட்ட போது அதிலிருந்து பலியான விமா னப் படை அதிகாரிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டுள் ளன.

விங்கமாண்டர் வீடர் வைசாலி கசீர், ஃபிளைட்லெப்டினன்ட் பிரியந்த பெர்னாண்டோ, ஃபிளைட் லெப், சுரேஷ் மெண்டிஸ், சமந்த இரட்னா யக்கா, பிரேமரட்ன விஜய கோன் ஆகியோர்களே அவர் களாவர்.

## இராணுவத் ..

பதி பாதுகாப்பு அமைச்சு செயலாளர் பதவி தேவை தானா என அவர்களைக் கண் டித்தும் உள்ளது.

சண்டே ஒப்சேவரின் இந்த கட்டுரை மூலம் ஸ்ரீலங்கா இராணுவ உயர்மட்ட தலை மையில் பிளவு ஏற்பட்டுள் ளதுவெளிச்சமாகத்தெரிகிறது என ஏ. எப்: பி செய்தியா ளர் தெரிவித்துள்ளார்.


## முக்கிய அறிவித்தல்

**வட மாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்,**

1. கட்டடம்
2. நீர்பாசனம்
3. நீர்வள வடிகால்
4. மின்சாரம், இலத்திரனியல்
5. வீதி அமைத்தல், திருத்தல்
6. உருக்குத்தளபாடம், உருவார்க்கல்
7. மரத்தளபாடம்
8. காரியாலய உபகரணங்கள்

வட மாகாணத்தில் உள்ள திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / வங்கிகள் / மாநகரசபைகள் / நகர பிரதேச சபைகள் ஆகியவற்றில் காணப்படும் மேற் கண்ட வேலைகளை உள்ளடக்கிய சகல விதமான ஒப் பந்த வேலைகளையும் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே மேற்கொள்ள முடியும் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் மேற்கண்டவேலைகளை மேற்கொள்ளும் நிலையில் உள்ளீர்களா எனத் தீர் மானிக்கும் பொருட்டு சங்கத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்களையும் இது வரை பதிவு செய்யாதவர் களையும் வருகின்ற 15 07 1992க்கு முன் சங்கக்காரி யாலயத்தில் தொடர்பு கொண்டு உங்கள் பெயர் களைப் பதியும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மு. சி. சண்முகராசா.
கௌரவ செயலாளர்

4/1, சம்பியன் வீதி,
கொக்குவில்,

07017


இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லங்கா கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 09-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# செட்டிக்குளம், தந்திரிமலையில் படைகள் குவிப்பு !

செட்டிக்குளம் படையினர் இப் பகுதியில் நெருக்கமான முறையில் காவலரண்களை அமைத்து வருகின்றனர் காவ லரண்களில் படையினரின் தொகையையும் அதிகரிக்கப் பட்டு வருகிறது.

செட்டிக்குளத்தில் கடந்த இரு மாதங்களில் சுமார் 20 காவலரண்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தந்திரி மலை யிலும் படையினர் குவிக்கப் பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது மன்னார் வீதியில் மீண்டும் இராணுவ நடவ டிக்கை மேற்கொள்ளவே இப் படை குவிப்பு என தெரிவிக் கப்படுகிறது.

★ தேசிய அடையாள அட்டைக்குரிய

# காணாமல்போனவிண்ணப்பங்கள் மீண்டும் 'விண்ணப்பிக்க ஏற்பாடு

யாழ் செயலக ஆட்பதிவு திணைக்களத்தில் இருந்து கொழும்பு தலைமையகத் துக்கு அனுப்புவதற்காக யாழ். பிரதம தபாற்கந்தோ ருக்கு எடுத்துச் சென்றபோது காணாமல் போன அடை யாள அட்டை விண்ணப்பங் களின் விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண் டும் என யாழ் செயலக வட் டாரங்கள் தெரிவித்தன.

சம்பந்தப்பட்ட திணைக் களத்தின் ஊழியரின் கவனக் குறைவால் இவை காணமல் போனதாகவும் பாதிக்கப்பட் டவர்கள் தெரிவித்தனர்.

பலத்த சிரமத்தின் மத்தி யில் தற்போதைய நிலையில் இருமடங்கு செலவில் புகைப் படம் எடுத்து முத்திரைகள் ஒட்டி கிராமசேவையாளர் அலுவலகத்துக்கு அடைந்து தாம் விண்ணப்பித்ததாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரி வித்தனர்

இதேவேளை தவறிய விண் ணப்பப்படிவங்களுக்கு உரிய வர்கள் மீண்டும் விண் ணப்பிக்க விசேட ஒழுங்கு களை யாழ் அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

இதற்கான செலவுகளை யாழ் செயலகமே மேற்கொள் ளும் எனவும் மேலும் தெரி விக்கப்படுகிறது. 47

## சார்க்கிற்கு ஜப்பான் உதவி

சார்க் அமைப்பு நாடுகளி டையே ஜப்பானின் செல் வாக்கு பரவக்கூடிய சாத்தி யங்கள் அதிகரித்துள்ளன.

தற்போது கொழும்பில் நடைபெறும் சார்க் நாடுக ளின் வெளியுறவு அமைச்சர் கள் மாநாட்டில் ஜப்பானின் உதவிகளை பெறுவதான யோசனை குறித்தும் ஆரா யப்பட்டது.

## றொட்னி...

சாட்டு என வாதாடியதால் ஆறு மணித்தியாலங்களின் பின் றொட்னி விடுதலை செய்யப்பட்டார்.

## படையினரைப் ...

கொண்டுவரப்படுகின்றன,

இதன் பொருட்டு வெற் றிலைக்கேணியில் பெருமளவு படையினர் தரையிறக்கப் பட்டு வருகின்றனர்

## இடம் ...

இந்தபோல இவ்வாலை, மாதகல் மாரீசன்கூடல் முள் ளானை ஆகிய பகுதிகளிலிரு ந்து அகதிகளாக இடம்பெயர் ந்த மக்களுக்கும் நிவாரண உணவுப் பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது 06

## புலிகளின்...

வாதாரத்தில் பெரும் செலவு களை ஏற்படுத்தியுள்ளது. இதை நீடிக்க விடமுடியாது என ஜெயலலிதா மேலும் தெரிவித்தார்

இதனால் புலிகள் இயக் கத்தை முற்றாக அழித்தாலே இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனவும் ஜெயலலிதா குறிப்பிட்டார்.

ஜெயலலிதா பதவி ஏற்ப தற்கு முன் இந்தியன் எக்ஸ பிரஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் புலிகள் அழிக்கப் பட்டால் இலங்கை தமிழினத் திற்கே ஆபத்து ஏற்பட்டு விடும் என கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது,

## புலிகளை...

ணுவ தினரின் தற்போதைய இராணுவ நடவடிக்கையை கண்டிக்கவும், புலிகளுக்கு ஆத ரவு தெரிவித்தும் ஆர்ப்பாட் டம் ஒன்று நடைபெறவுள்ளது

சென்னையில் உள்ள ஸ்ரீலங்கா துணை தூதரகத்துக்கு முன் நடைபெறவுள்ள இந்த ஆர்ப் பாட்டத்திற்கு பாட்டாளி மக் கள் கட்சி, இந்திய குடியரசுக் கட்சி, இந்திய மக்கள் முன் னணி, எம் ஜி ஆர் அ. தி. மு. க ஆகியகட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன

இந்த போராட்டத்தை நசுக் கும் ஓர் முயற்சியாக தமிழக அரசின் இந்த புலிகளிடம் ஆயுதங்கள் கோரும் அறிவிப்பு வெளிவந்திருக்கலாம் என சந் தேகிக்கப்படுகிறது

★ காவல்துறை அறிவிப்பு

# பதினெட்டாயிரம் குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

தற்போதைய போர்க்கால சூழ் நிலையைச் சாட்டாக வைத்துக் கொள்ளை இலா பம் பெறும் நோக்குடன் மக்க ளின் அத்தியாவசியப் பொருள் களில் ஒன்றான மண்ணெண் ணெயைப் பதுக்க முயன்ற வர்த்தகர்களிடம் இருந்து தமி ழீழ காவல் துறையினர் பெரு மளவு மண்ணெண்ணெயைக் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் குடும்பத் திற்குத் தலா இரண்டு லீற் றர் வீதம் 18, 841 குடும்பங் களுக்கு விநியோகிக்கப்பட் டுள்ளது.

பொதுமக்களால் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் தொடர்ந்தும் இதுபோன்ற தரமான நடவடிக்கைகளில் தமிழீழ காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர், சமூக நலன் கருதி எடுக்கப்படும் இந் நடவடிக்கைகளுக்கு ஒத் துழைப்பு நல்கி வரும் சகல பொதுமக்களுக்கும் காவல் துறையினர் நன்றி தெரிவித் துக்கொள்கின்றனர்.

இதேசமயம் ஒரு சில வர்த் தகர்கள் தாமாகவே முன் வந்து காவல்துறையின் உத வியுடன் மண்ணெண்ணெ யைப் பொதுமக்களுக்கு விநி யோகிக்க முன்வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது,

பொதுமக்களுக்குத் தேவை யான அத்தியாவசியப் பொருள்களை எதுவித தயக்கமுமின்றி விநியோகிக்கு மாறு சகல வர்த்தகர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்ற னர்.

# செஞ்சிலுவை வாகனம் ஓட்டோவை நொருக்கியது

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனம் வீதியில் நின்ற ஓட்டோவை சில யார் தூரம் இழுத்துச்சென்று நொருக்கிய சம்பவம் கொழும்பு ஹைலொக் வீதி யில் கடந்த வியாழன் இடம் பெற்றுள்ளது.

ஓட்டோவின் சாரதி அதில் இருக்காதபடியால் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என வும் தெரிவிக்கப்பட்டது.

# தண்டனை விதிக்கப்பட்டவர் தொடர்ந்து தடுத்து வைப்பு

குற்றத்தை ஒப்புக் கொண்டு ஒத்திவைக்கப்பட்ட சிறு தண் டனை விதிக்கப்பட்ட சங்க ரப்பிள்ளை பாலச்சந்திரன் என்பவர் தொடர்ந்தும் தடுப் புக்காவலில் வைக்கப்பட்டுள் ளார்.

கொழும்பு குண்டு வெடிப்பு சந்தேக நபர் எனக் கருதப் படும் வரதனைப் பற்றிய தகவல்களை பொலிஸாருக்கு தெரிந்தும் அறிவிக்கவில்லை என இவர் மீது குற்றம் சுமத் தப்பட்டது

2 7- 91 இல் கைதாகி இவர் மீது 2. 4,92 இல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது; 24-4-92 இல் இவர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதைபடுத்து 30 ஆயிரம் ரூபா அபராதமும் 10 வருடத்துக்கு ஒத்தி வைக் கப்பட்ட 2 வருடச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட் டது.

ஆனால் இவர் வழக்கு முடிந்த பின்னரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனைவி சுதந்திரமலர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வுமனுத் தாக்கல் செய்துள்ளார்:

## ஹெலியிலிருந்து பிரசுரங்கள்

யாழ் குடாநாட்டில் நேற்று ஹெலிகொப்டரிலி ருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. 24, 47, 06